# வலிகாமம் தெற்கு கண்ணகி நலன்புரி நிலையத்தில் இடம்பெயர்ந்து வாழும் மக்களின் சமூகஇ பொருளாதார நிலை பற்றிய ஆய்வு.

*நவவித்திஜா பலராமன்,
[a]A.S. சூசை,
புவியியற்றுறை, யாழ் பல்கலைக்கழகம்
pnvidhya5@gmail.com
.

ஆய்வுச் சுருக்கம்

இவ் ஆய்வானது வலிகாமம் தெற்கு கண்ணகி நலன்புரி நிலையத்தில் இடம்பெயர்ந்து வாழும் மக்களின் சமூக, பொருளாதார நிலையை மதிப்பீடு செய்வதாகவுள்ளது. யாழ்ப்பாண மாவட்டத்திலே வாழுகின்ற மக்கள் பல்வேறு தடவைகள் இடப்பெயர்விற்கு உட்பட்டிருப்பதோடு இன்றைய காலப்பகுதி வரைக்கும் சில பகுதிகள் மீள்குடியேற்றத்திற்கு முழுமையாக அனுமதிக்கப்படவில்லை. குறிப்பாக வலிகாமம் வடக்குப் பகுதியிலே 1990ம் ஆண்டினைத் தொடர்ந்து அப்பகுதியிலிருந்து இடப்பெயர்வை மேற்கொண்ட மக்கள் இன்றைய காலப் பகுதி வரைக்கும் முற்று முழுதாக அவர்களுடைய சொந்த இடங்களில் மீள்குடியேற்றப்படவில்லை. எனவே இம் மக்களில் பெரும்பான்மையானோர் நலன்புரி நிலையங்களிலேயே வாழ்ந்து வருகிறார்கள். வலிகாமம் தெற்கு பிரதேச செயலக பிரிவிலுள்ள மிகப்பெரிய நலன்புரி நிலை யமான கண்ணகி நலன்புரி நிலையத்தில் மட்டும் 153 குடும்பங்கள் வசிக்கிறார்கள். இவ்ஆய்வினுடைய நோக்கங்களாக கண்ணகி நலன்புரிநிலைய மக்களின் சமூக, பொருளாதார நிலையை மதிப்பீடு செய்தல் அம் மக்கள் சமூக, பொருளாதார ரீதியாக எதிர்நோக்கும் பிரச்சினைகளை கண்டறிதல், அப்பிரச்சினைகளுக்குரிய தீர்வுகளுக்கான வழிமுறைகளை முன் மொழிதல் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு அத்தியாயப்படுத்தி விபரிக்கப்பட்டுள்ளது. இவ்ஆய்வுக்கான தரவுகளும், தகவல்களும் முதனிலை மற்றும் இரண்டாம் நிலை தரவு சேகரிப்பு முறைகளுக்கூடாக சேகரிக்கப்பட்டன.முதனிலைத் தரவுகள் வினாக்கொத்துஇ நேர்காணல், நேரடி அவதானம், கலந்துரையாடல் என்பவற்றின் மூலமும் இரண்டாம் நிலைத் தரவுகள் வலிகாமம் தெற்கு பிரதேச செயலகத்திலிருந்தும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை- காங்கேசந்துறையிலிருந்தும் பெறப்பட்டன. இவ்வாறாக பெறப்பட்ட தரவுகளின் மூலம் இந்நலன்புரி நிலைய மக்களின் சமூக பொருளாதார ரீதியான நிலைபிரச்சினைகள் என்பன பெறப்பட்டு விபரண புள்ளி விபரபகுப்பாய்விற்குட்படுத்தப்பட்டு வரைபுகளாக்கி பயன்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் பெற்ற தரவுகளையும் கள நிலைமைகளையும் கொண்டு இம்மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குரிய தீர்வுகளுக்கான வழிமுறைகளும் முன்மொழியப்பட்டுள்ளன.

இந்நலன்புரி நிலையத்திலே வாழுகின்ற மக்கள் அனைவருமே தமது சொந்த இடத்திலே மீள்குடியேறு வதையே விரும்புகிறார்கள். இதனை மேற்கொள்வதன் மூலம் இம்மக்கள் யாரிலும் தங்கியிருக்காது தாமே தமது வாழ்க்கையை கொண்டு நடாத்துவதுடன் தமது சமூக பொருளாதார நிலையையும் இம்மக்களே உயர்வடைய செய்வார்கள்.